5th November 1965]

## வேப்பூரில் மாணவர் விடுதி

* **297 கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டத்திலுள்ள வேப்பூரில் ஹரிஜனங்களுக்கும் பின்தங்கிய வகுப்பாளர்களுக்கும் விடுதி கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள வேப்பூரில் ஹரிஜன நலத்துறை நடத்தும் மாணவர் விடுதி எதுவும் இல்லை. ஆதலால் அங்கே அரிஜனங்களுக்கும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் விடுதிக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. இரா. நாராயணன் :** ஸார், இந்த இடத்தில் விடுதிகள் எதுவும் இல்லையாதலால், அரிஜன விடுதி ஒன்று கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** முதலில் விடுதி கட்ட வேண்டும் என்று சொல்லும்போது, அந்த இடத்தில் விடுதி தேவைதானு என்பதைப் பார்க்க வேண்டும், பக்கத்திலே வேறு விடுதிகள் இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும், இட வசதியிருக்கவேண்டும், விடுதி அவசியம்தானு என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். இவற்றையெல்லாம் பார்த்துத்தான் முடிவு எடுக்கவேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன் :** பல இடங்களில் இருக்கின்ற மாணவர்கள் விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. சில இடங்களில் இதற்காக இடமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது புதிதாக தனியாக சர்க்காருக்கென்றே கட்டுவதற்கு என் தயக்கம் ஏற்படுகிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** படிப்படியாகத்தான் அரசாங்கம் வேலைகளை எடுத்துக்கொள்ள முடியும். நம் மாநிலத்தில் இருக்கின்ற 352 கவர்ன்மென்ட் ஹாஸ்டல்களில் 30 விடுதிகள்தான் அரசாங்க கட்டடத்தில் இருக்கின்றன. பாக்கி 322 விடுதிகள் பிரைவேட் கட்டடங்களில்தான் இருக்கின்றன. அதிலும் 4 விடுதிகள் வாடகையில்லாமல் தனிப்பட்ட சில அன்பர்களுடைய கட்டடங்களில் நடந்து வருகின்றன. அவ்வாறும் கொடுத்து உதவியிருக்கிறார்கள். நம்முடைய நிதி நிலைமைக்கு தகுந்தவாறு சர்க்கார் கட்டடங்களை கட்டுவதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, சில பகுதிகளில் மாணவர்கள் விடுதிகள் கட்டியாய்விட்டது. இன்னும் சில இடங்களில் கட்டவேண்டும் என்று அரசாங்கம் சொல்லிக்கொண்

டிருக்கிறது. இனி எந்தெந்த பகுதிகளில் சர்க்கார் மாணவ உணவு விடுதி கட்டப்போகிறது, எத்தனை விடுதிகள் கட்டப்போகிறார்கள் என்கின்ற எண்ணிக்கையையாவது தெரிவிப்பார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனியாகக் கேள்வி கேட்டால் இதற்கான கணக்கை தெரிவிக்கலாம்.

### ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள்

* 298 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம், முசிரி தாலூகாவிலுள்ள சுண்டைக்காய் கிராமத்தில் குடியிருப்பு மனைகள் வழங்கக் கோரி அவ்வூர் ஹரிஜனங்களிடமிருந்து மனு ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) வீடற்ற 14 ஹரிஜனக் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும்பொருட்டு சுண்டைக்காய் கிராமத்தில் 1·41 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. உள்துறையில் 6-7-1965-ல் வெளியான 3153-ம் எண் அரசாங்க ஆணையில் அந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, ஒரு ரெவின்யு டிவிஷனுக்கு ஒரு தாசில்தார், ஒரு தாலூகாவுக்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மனைக்கட்டுகள் வழங்குவதற்கு என்று ஸ்பெஷல் ட்யூடியாக வேலை செய்து வருகிறார்கள். இவ்வளவிருந்தும் மனைக்கட்டுகள் வழங்குகின்ற நிகழ்ச்சிகள் துரிதமாக நடைபெறவில்லை. இதைப்பற்றி பல உறுப்பினர்களும் இங்கு தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் காலதாமதத்தை தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? அடுத்து, எல்லோருக்கும் மனைக்கட்டுகள் வழங்கப்போவதாக சொல்லுகிறார்கள். முதலாவது குறிப்பாக எல்லா அரிஜன மக்களுக்கும் மனைக்கட்டுகள் வழங்குவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கனவே மனைக்கட்டுகள் வழங்குகின்ற விஷயத்தைப்பற்றி இங்கு விரிவாக பேசியிருக்கிறோம். எவ்வளவு துரிதமாக மனைக்கட்டுகள் வழங்கவேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாக வழங்கப்பட வேண்டும் என்று கலெக்டர்களுக்கு சொல்லியிருக்கிறோம். ஆனால் சில நேரங்களில் இதில் இடையூறுகள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக 'ரிட்' போட்டுவிடுகிறார்கள். இதையெல்லாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. இருப்பினும் எவ்வளவு துரிதமாக கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.